# பழஞ்சூர் செல்வம் மகன் விக்னேஷ் - சூர்யா இணையரின் திருமணம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்துரை!

பட்டுக்கோட்டை, பிப். 19-

**பட்டுக்கோட்டையில் கழக மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வம் அவர்களின் மகன் விக்னேஷ் - சூர்யா இணையரின் திருமணத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார். இதில் அமைச்சர்கள், கழக எம்.எல்.ஏ.க்கள், மற்றும் கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.**

விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ``மணமக்கள், தந்தை பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, கலைஞர் அவர்களும் சமூக நீதியும் போல, முதலமைச்சர் அவர்களும் - கழகமும் போல சிறப்புகளுடன் வாழ வேண்டும்” என வாழ்த்தினார்.

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:-**

கழகத்தின் வர்த்தக அணித் துணைச் செயலாளர் அண்ணன் பழஞ்சூர் செல்வம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு, உங்களோடு சேர்ந்து மணமக்களை வாழ்த்துவதில், உண்மையில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு இல்லற வாழ்வில் அடி எடுத்து வைக்கக்கூடிய அன்புச் சகோதரர் விக்னேஷ் சூர்யா இணையருக்கு என்னுடைய வாழ்த்துகளை உங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழகக் குடும்ப விழா!**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணன் செல்வத்தின் மகள் திருமணத்தையும் இதே பட்டுக்கோட்டைக்கு வந்து நான் நடத்தி வைத்திருந்தேன். இன்றைக்கு அவருடைய மகனுடைய திருமணத்தையும் இங்கே நடத்தி வைக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இதை அண்ணன் பழஞ்சூர் செல்வம் அவர்களின் இல்லத் திருமணம் என்று சொல்வதை விட, கழகக் குடும்பத்தின் ஒரு திருவிழாவைப் போல இந்தத் திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு மிகச் சிறப்பாக இந்தத் திருமண நிகழ்ச்சியை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அண்ணன் செல்வத்தைப் பற்றி உங்களிடத்தில் அதிகம் சொல்லத் தேவையில்லை. கழகத்தின் தீவிரமான ஒரு செயல் வீரர். கலைஞர் மற்றும் நம்முடைய தலைவரின் பாசத்திற்குரிய உடன்பிறப்பு என்று அவரைச் சொல்லலாம். தன்னுடைய இளமைக் காலத்திலிருந்தே இந்த இயக்கத்திற்காகத் தொடர்ந்து உழைத்து வருகிறார் அண்ணன் செல்வம் அவர்கள். கழகம் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். கிளைக் கழகத்தில் ஆரம்பித்து, ஒன்றியம், நகரம் எனப் பணியாற்றி, இன்றைக்குக் கழகத்தின் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் துணைச் செயலாளராகத் தன் உழைப்பின் மூலம் அவர் உயர்ந்து நிற்கிறார்.

**எனக்குக் கூடுதல் பெருமை!**

அண்ணன் செல்வத்தின் உழைப்பை, செயல்பாடுகளைப் பார்த்து, இன்றைக்கு நம்முடைய தலைவர் அவர்கள் கழக வர்த்தக அணியின் துணைச் செயலாளராக அவரை உயர்த்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட, தன்னுடைய உழைப்பால் கழகத்திற்காக உழைப்பைக் கொடுத்து உயர்ந்திருக்கக்கூடிய அண்ணன் செல்வத்தின் திருமண நிகழ்ச்சியை நடத்தி வைப்பதில் எனக்குக் கூடுதல் பெருமை.

இந்தத் திருமண நிகழ்ச்சி, இன்றைக்கு ஒரு சுயமரியாதைத் திருமணமாகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே இந்த அரங்கத்தில் ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால் ஆண்களை விட அதிகமாக மகளிர் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டி ருக்கிறீர்கள். அதுவும் இந்த இரண்டு நாட்களாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெண்கள் இன்னும் கூடுதல் மகிழ்ச்சியோடு, எங்கு சென்றாலும் வரவேற்புக் கொடுக்கிறார்கள். சிரித்த முகத்தோடு இருக்கிறார்கள். ``முதலமைச்சருக்கு நன்றி சொல்லுங்கள்'' என்று எங்கு சென்றாலும் வாழ்த்துகிறார்கள்.

**கட்டணமில்லாப் பேருந்து திட்டம்!**

அரசு அமைந்தவுடன், நம் தலைவர் முதல் கையெழுத்திட்டார் மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். இன்றைக்கு இந்த ‘விடியல் பயணத் திட்டத்தின்’ மூலமாக இந்த நான்கரை ஆண்டுகளில் 960 கோடிப் பயணங்களை மகளிர்கள் மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு மகளிரும் மாதம் குறைந்தது 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், காலையில் எழுந்து வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள், குழந்தைகளுக்குச் சமைப்பதற்குச் சிரமப்படுவார்கள். அதற்காக நம் முதலமைச்சர் கொண்டு வந்ததுதான் ‘முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்’. ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய, அரசுப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்கு வந்தால் போதும், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். தரமான உணவு, அதன் பிறகு தரமான கல்வி வழங்கப்படுகிறது.

**புதுமைப் பெண் திட்டம்!**

பெண் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்தால் போதுமா? போதாது. உயர்கல்வி கற்க வேண்டும், கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்து பயின்றாலும், அவர்களுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’ மூலம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதேபோல் மாணவர்களுக்குத் ‘தமிழ்ப் புதல்வன் திட்டம்’.

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்ததுதான் நம்முடைய ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. கடந்த முறை தேர்தல் வாக்குறுதியில் சொன்னோம், “மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கொடுப்போம்” என்று. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறார். மூன்று வருடங்களாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள்.

**சூழ்ச்சி செய்தனர்!**

இதை எப்படியாவது இந்தச் சட்டமன்றத் தேர்தலுக்குள் நிறுத்திவிட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியும், அடிமை அ.தி.மு.க கூட்டமும் சூழ்ச்சி செய்தன. இதைத் தெரிந்து கொண்ட நம்முடைய தலைவர் அவர்கள், ``யார் நினைத்தாலும் நிறுத்த முடியாது, என்னுடைய தமிழ்நாட்டு மகளிருக்கு நான் கொடுக்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நான் கொடுப்பேன்'' என்று கூறி, இன்றைக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்குச் சேர்த்து இரண்டாயிரம் ரூபாய் மற்றும் கோடைக்காலத்திற்கான சிறப்புத் தொகுதியுடன் மொத்தம் ஐயாயிரம் ரூபாயை ஒரே நாளில், இரண்டே மணி நேரத்தில் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குச் சென்றடையச் செய்துள்ளார்.

எனவே, இன்றைக்கு மகளிர் கூடுதல் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், தலைவர் அவர்கள் இன்னொரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். நிச்சயம் வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் மீண்டும் ஆட்சியில் அமர்த்துவார்கள். நம்முடைய தலைவர் அவர்கள்தான் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர்வார்.

**2,000 ரூபாயாக உயர்வு!**

தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்த பிறகு, மகளிர் உரிமைத் தொகையை 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியையும் தலைவர் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவரும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார், ஆனால், அதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் நம்ப மாட்டார்கள். நம்முடைய தலைவர் கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் அவர் நிறைவேற்றுவார், மக்களுக்குச் செய்வார், சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை, இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களிடையே, குறிப்பாக மகளிரிடையே இருக்கிறது. எனவே தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், குறைந்தபட்சம் 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும் என்று இலக்கு கொடுத்திருக்கிறார். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு” என்று தலைவர் சொல்லியிருக்கிறார்.

**களத்தில் இறங்கி பிரச்சாரம்!**

இன்னும் ஐம்பது நாட்கள்தான் சட்டமன்றத் தேர்தலுக்கு இருக்கின்றன. இந்த ஐம்பது நாட்களும் நாம் அனைவரும் களத்தில் இறங்கி நம்முடைய தேர்தல் பிரச்சாரத்தைச் செய்தோம் என்றால், நிச்சயம் இருநூறு அல்ல, இருநூறுக்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இன்றைக்கு இல்லற வாழ்க்கையில் இணையக்கூடிய இணையருக்கு அதிகம் அறிவுரை கூறத் தேவையில்லை. இருவரும் நன்கு படித்தவர்கள். அவர்களுக்கு ஒன்றே ஒன்றுதான் சொல்வேன். சுயமரியாதையோடு நல்ல தம்பதிகளாக, குறிப்பாக நல்ல நண்பர்களாக ஒருவரையொருவர் புரிந்து கொண்டு உங்களின் வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய தலைவர் அவர்கள் எல்லாத் திருமண நிகழ்ச்சிகளிலும் ஒரேயொரு வேண்டுகோளைத்தான் வைப்பார். உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தை, அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அக்குழந்தைக்கு ஒரு அழகான தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன். உங்கள் அனைவரின் சார்பாக மணமக்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

---

# கடையநல்லூரில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

தென்காசி பிப்.19

தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூரில் சட்டமன்ற தொகுதி தி.மு.க சார்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அவர்களையும் மகளிர் உரிமை தொகையையும், பெண்களையும் அவதூறாக பேசிய கடையநல்லூர் அ.தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை தலைமையில் கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் குணசேகரன், மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல்காதர், நகர செயலாளர்கள் வடக்கு அப்பாஸ், தெற்கு பீரப்பா, கிழக்கு ஒன்றிய செயலாளர் சுரேஷ், நகர இளைஞரணி அமைப்பாளர் கே.ஆர். யாசின், ம.தி.மு.க.நகர செயலாளர் முருகன், எஸ்.டி.பி.ஐ.மாவட்ட பொருளாளர் யாசர்கான், முஸ்லிம் லீக் செய்யது மசூது, காங்கிரஸ் ரவி, ம.ம.க.பாசித் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் 1000,க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மாநில மகளிரணி பிரச்சார பிரிவு செயலாளர் சேலம் சுஜாதா கண்டன உரையாற்றினார். நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி, ஷேக்தாவூது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், தமிழ்செல்வி,

ஒன்றிய செயலாளர் திவான் ஒலி, பேரூர் செயலாளர்கள் சிதம்பரம், வெள்ளத்துரை, தங்கப்பா, ராஜராஜன், மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஐவேந்திரன் தினேஷ், ஒன்றிய கவுன்சிலர்கள் அருணாசல பாண்டியன், மாரியம்மாள், சண்முகையா, பகவதியப்பன், மகளிரணி பேபி, ராஜேஸ்வரி, கவிக்குயில், பேச்சாளர் கருப்பண்ணன், ஊர் மேலழகியான் சுப்பிர மணியன், பூரணசந்திரன், அருள்செல்வன், நவீன், கவுன்சிலர் திவான் மைதீன், பேச்சாளர் சாகுல் ஹமீது, தங்கம், கணேசன், கருப்பசாமி, அழகு தமிழ், காளிமுத்து, யாத்ரா பழனி, ராஜாமுகமது, பெருமாள் துரை, காசி, அலி, ஆஷிக், ஈஸ்வரன், பிள்ளையார் பாண்டியன், ரவி, தங்கபாண்டி, பெரியசாமி, ஈஸ்வரன், இப்ராஹிம் உட்பட 1000 த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

---

## தென்காசி தெற்கு மாவட்டம்

# ஆலங்குளம் வடக்கு, ஆலங்குளம் மத்திய, கடையநல்லூர் மேற்கு, கடையநல்லூர் தெற்கு, கீழப்பாவூர் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் 16.12.2025 அன்று தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் வடக்கு, ஆலங்குளம் மத்திய, கடையநல்லூர் மேற்கு, கடையநல்லூர் தெற்கு, கீழப்பாவூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அந்தந்த ஒன்றியங்களுக்கான பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆலங்குளம் வடக்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1.எஸ்.அம்பி, நடுத் தெரு, நவநீதகிருஷ்ணாபுரம், 2. எம். பரமசிவன், வடக்குத் தெரு, கல்லத்திகுளம். 3. எம்.ரமேஷ், தெற்குமேடு, தட்டப்பாறை, 4. திருமதி எஸ்.ஸ்ரீதேவி, சர்ச் தெரு, ஊத்துமலை, 5. எஸ்.கோட்டைச்சாமி, மேலத் தெரு, அண்ணாமலைப்புதூர். 6. ஜி. சுப்பிரமணியன், வடக்குத் தெரு, தட்டப்பாறை. 7. எம். ஜி. ராமச்சந்திரன், கனாக்கடை தெரு, ஊத்துமலை. 8. ஏ.முருகேசன், அம்மன்கோவில் தெரு, பலபத்திர ராமபுரம். 9. ஆர். ராஜாமணி, வடக்குத் தெரு, கீழக்கலங்கல். 10. எஸ். விண்ணரசு, வடக்குத் தெரு,மேலக்கலங்கல்.

**ஆலங்குளம் மத்திய ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. பாலசுப்பிரமணியன், அம்பிகை நகர், வீராணம்-, 627 861. 2. பால்துரை, கிழக்கு தெரு, கருவந்தா, வீரகேரளம்புதூர். 3. எம்.எஸ்.சந்திரன், மொட்டையன்கோவில் தெரு, சோலைசேரி.4. கலைச்செல்வி, வடக்குத்தியம்மாள் கோவில் தெரு, அச்சங்குட்டம். 5. ஆ. கணபதி, லட்சுமிபுரம், அச்சங்குட்டம், வீரகேரளம்புதூர். 6. எஸ். ராமச்சந்திரன், தெற்கு தெரு, வீரகேரளம்புதூர். 7. பி. மாரியப்பன், தெற்கு தெரு, வாடியூர், வீரகேரளம்புதூர். 8. பி. பரமசிவன், மெயின் ரோடு, பரங்குன்றாபுரம், வீரகேரளம்புதூர். 9. எம்.ஜோசப்பூமாலைராஜா, மெயின் ரோடு,மரியதாய்புரம். 10. அன்சர் அலி, முஸ்லீம் மேலத் தெரு, வீராணம், வீரகேரளம்புதூர்.

**கடையநல்லூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. சு.வேல்ச்சாமி, கர்ணம் தெரு, சொக்கம்பட்டி. 2.கே. சங்கரபாண்டியன், பள்ளிக்கூடத் தெரு, திரிகூடபுரம். 3. சு.முருகேசன், பிள்ளையார் கோவில் தெரு, சொக்கம்பட்டி. 4. பெ. பண்டாரச்சாமி, மெயின் ரோடு, சிவராமப்பேட்டை, கொடிக்குறிச்சி, 5. தி. மாரியப்பன், சிவகாமியாபுரம், நெடுவயல்.6. ஆ. லெட்சுமணன், அம்மன் கோவில் தெரு, காசிதர்மம். 7. க.முருகன், அரண்மனைத் தெரு, சொக்கம்பட்டி. 8. என். ராமசாமி, பிள்ளையார்கோவில் தெரு, சொக்கம்பட்டி. 9. கேஆர்கே.முருகேசன், மெயின் ரோடு, சொக்கம்பட்டி., 10. எஸ்.கதிரேசன், திருவள்ளுவர் தெரு, சொக்கம்பட்டி.

**கடையநல்லூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. க.கைலாசம், ஆசாரிபிள்ளையார்கோவில் தெரு, குலையநேரி. 2. ஏ.பீர் முகம்மது, போஸ்ட் ஆபீஸ் தெரு, ஆனைகுளம். 3. வி. குமார், கீழத் தெரு, ஆனைகுளம். 4. எஸ். கணேசன், வடக்குத் தெரு, அம்மையாபுரம். 5. ஆர். திருமலைக்குமார், காமராசர் தெரு, பூப்பாண்டியாபுரம். 6. சுப்பையா (எ) செல்வர், மெயின் ரோடு, அருணாச்சலபுரம். 7. எஸ்.காந்தி, வடக்குத் தெரு, குலையநேரி. 8. எம். வெயில்முத்து, ஊர் கிணறு தெரு, இரட்டைகுளம். 9. கே. தர்மராஜ், காளியம்மாள் கோவில் தெரு, துரைச்சாமிபுரம். 10. பி. மாணிக்கம், அம்மன் கோவில் தெரு, இரட்டைகுளம்.

**கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. சு.வினைதீர்த்தான், மெயின் ரோடு, திப்பணம்பட்டி-627 808. 2. இரா.சமுத்திரப்பாண்டியன், தெற்கு தெரு, இராமச்சந்திரபட்டணம். 3. வளர்மதி ஆர். ராஜன், காக்கும் பெருமாள்பட்டி தெரு, ஆவுடையானூர். 4. சு.ரவிக்குமார், தீர்த்தாரப்பபுரம், ஆவுடையானூர்-627808. 5. ரா.செந்தூர்முருகன், வெள்ளைப்பனயேறிப்பட்டி, அரியப்புரம். 6. செ.ஜான்நியூட்டன், மாடியனூர், ஆவுடையானூர். 7. எஸ்.செய்யதுஅலி, பள்ளிவாசல், வடக்குத் தெரு, ரகுமானியப்புரம். 8. மு.சரவணகுமார், காமராஜர் தெரு, அரியப்புரம். 9. ரா. ராஜன், தெற்கு தெரு,சிவநாடானூர்-627808. 10. க.மல்லிகா, வன்னியசுந்தரபுரம், திப்பணம்பட்டி.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## பொன்.கௌதமசிகாமணி தலைமையில் - விழுப்புரம் தெற்கு மாவட்டம்

# திருக்கோவிலூரில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை கூட்டம்!

## முனைவர் க.பொன்முடி – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் – தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை!

விழுப்புரம், பிப். 19–

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நாளை (20.2.2026 – வெள்ளிக்கிழமை) கழக துணைப் பொதுச்செயலாளர் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினருமான க.பொன்முடி, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மண்டல பொறுப்பாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நாளை (20.2.2026 – வெள்ளிக்கிழமை) தமிழ்நாடு தலைக்குனியாது என்று பரப்புரை நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெறுகிறது முனைவர் க. பொன்முடி , வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும் , மண்டல பொறுப்பாளரும் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தொகுதி பார்வையாளர் ஜி.கார்த்திகேயன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, இதில் பங்கேற்கவிருக்கின்றனர். முதல் நிகழ்ச்சியாக விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள அரகண்டநல்லூர் , ஓம் சக்தி மஹாலில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள், விவசாயிகள், உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டமும் , பின்னர் கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சியும், மாலை 4.00 மணிக்கு அரகண்டநல்லூர் சலாம் பேப்பர் ரைஸ் மில் வளாகத்தில் நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சிகளின் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

## திருப்பூர் தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.ஆர்.பாபு அவர்கள் உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் தான் வகித்துவந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால்,

திருப்பூர் தெற்கு மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 20 (வெள்ளிக் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 17.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

# திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக கே.ஈஸ்வரசாமி, எம்.பி., அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட பணிகள் செவ்வனே நடைபெற, பின்வரும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:

1. இரா. ஜெயராமகிருஷ்ணன், துங்காவி, மடத்துக்குளம்.
2. கே.எம்.முபாரக்அலி, காரத்தொழுவு, மடத்துக்குளம்.
3. எம். முருகானந்தம், விளாமரத்துப்பட்டி, உடுமலைப்பேட்டை.
4. இ. ராதிகா, பூலாங்கினார், உடுமலைப்பேட்டை.
5. டி. சக்திவேல், சிஞ்சுவாடி, பொள்ளாச்சி.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

# தி.மு.க. தொண்டர் அணி

## இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக **சே. மணிகண்டன்,** (1/502, பசும்பொன் நகர், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.2.2026

**மாஸ்டர் பெ. சேகர்,**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி